**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** — **தலைவர்**

**R.சந்திரசேகரன்.** — **பொதுச்செயலாளர்**

சுற்றறிக்கை எண் 19 / 2017 17-11-2017

அன்புடையீர்,

வணக்கம். ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு திருத்தம் சம்மந்தமாக இன்று (16.11.2017) காலை 11.45 மணியளவில் மின்வாரியத்தலைவரை நமது சங்கம், சம்மேளனம் மற்றும் தொ.மு.ச. பொதுச்செயலாளர்கள் சந்தித்துப் பேசினோம். இப்பேச்சு வார்த்தையின் போது நமது சங்கத்தலைவரும், சம்மேளனம் மற்றும் தொ.மு.ச. பொறுப்பாளர்களும் உடனிருந்தனர்.

ஊதிய உயர்வை பொறுத்தவரை ஏற்கனவே அறிவித்தவாறு 2.57 காரணி, மற்றும் சலுகைகள் வழங்கப்படும். நிலுவைத் தொகைக்கு சாத்தியமில்லை. அரசு ஊழியர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கப்படுவதைப் பொருத்து, மின்வாரிய ஊழியர்களுக்கும், வழங்கப்படும் என்பது ஒப்பந்தத்தில் சேர்க்கப்படலாம். சர்வீஸ் வெயிட்டேஜ், பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வுகள், முதலியவை ஒப்பந்தத்தில் இடம் பெறலாம்.

வேலை பளுவில், தொழிலாளர்களுக்கு மேலும் சில சாதகமான திருத்தங்கள் செய்து, இன்னும் சில தினங்களில் புதிய முன் மொழிவினை சங்கங்களுக்கு கொடுத்து, பேச்சு வார்த்தை நடத்தி, ஊதிய உயர்வு மற்றும் வேலை பளு, இரண்டுக்கும் சேர்த்து ஒப்பந்தம் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பவை பேச்சு வார்த்தையின் போது வெளிப்பட்ட விஷயங்களாகும்.

மற்றபடி நிலுவைத் தொகை வழங்கிட வேண்டும், அட்டைப்பட்டியல் பிரிவு அலுவலர்கள் பொறுப்பு கூடுதலாக்கிட வேண்டும். களப்பிரிவில் Spl.Gr.Foreman பொறுப்புகள் கூடுதலாக வழங்கிட வேண்டும். ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரப் படுத்தப்பட வேண்டும். களப்பிரிவு தொழிலாளர்கள் பதவி உயர்வு வழக்கு தீர்ப்பின் நகலினை விரைவில் பெற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகள் வலியுறுத்தப் பட்டது.

தோழமையுள்ள

ஆர்.சந்திரசேகரன்

பொதுச்செயலாளர்

பெறுநர்.
வட்டச்செயலாளர்கள்,
மண்டலச்செயலாளர்கள் மற்றும்
மத்தியசங்கப் பொறுப்பாளர்கள்.